# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011*, ஏப்பிறல் மாதம் *1* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க,**
**தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டம்**

*[2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ 8/2011*

***2011 சனவரி 1 ஆம் தேதி தொடக்கம் ஏதேனும் தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஆட்களிடமிருந்து தொலைத்தொடர்பு அறவீட்டை விதிப்பனவு செய்வதற்கும் ; 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II ஐத் திருத்துவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம் என்பதுடன் எல்லா நோக்கங்களுக்காகவும் 2011 சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

## பாகம் I

### தொலைத் தொடர்பு அறவீடு

*தொலைத் தொடர்பு அறவீட்டின் விதிப்பனவு.*

***2**. 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்கு இயக்குநரால் அளிக்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கலின் பெறுமதியின்மீது ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத்தொடர்பு சேவைகள் கிடைக்கப்பெறுவதன்மீது 20 சதவீதப்படி தொலைத் தொடர்பு அறவீடு என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப்பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் ''பெறுநர்'' என அழைக்கப்படுபவர்) அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும் :*

*ஆயினும், எந்த ஒழுங்கமைப்பிற்கு அல்லது தனியாளுக்கு 1996ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்றனவோ அந்த*

ஏதேனும் ஒழுங்மைப்பு அல்லது எவரேனும் தனியாள் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அறவீட்டைச் செலுத்துமாறு தேவைப்படுத் தப்படுதலாகாது.

*அறவீட்டைச் சேகரிக்கும் முறை.*

**3**. இரண்டாம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இயக்குநர்களால் சேகரிக்கப்பட்டு 2011 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மாதத்தின் முடிவிலிருந்தும் பதினைந்து நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விவரங்களுடன் சேர்த்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழு அறவீட்டை அரசாங்கத்தின் சார்பில் சேகரித்தல்.*

**4**. இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அரசாங்கத்தின் சார்பில் ஆணைக்குழுவால் சேகரிக்கப்பட்ட அறவீடு 3 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறு அறவீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*திறைசேரிச் செயலாளர் வழிகாட்டு நெறிகளை வழங்குதல்.*

**5**. திறைசேரிச் செயலாளர் அறவீட்டை சேகரித்தல் மற்றும் அனுப்புதல் தொடர்பில் காலத்துக்குக்காலம் வழிகாட்டு நெறி களை வழங்கலாம்.

*அறவீட்டைச் செலுத்தத் தவறும் விடயங்களில் நடவடிக்கை.*

**6**. (1) இரண்டாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எவரேனும் இயக்குநரால் அளிக்கப்படும் சேவைகளின் வழங்கலின் பெறுமதியின்மீது வருமதியான அறவீட்டின் மொத்தத் தொகையைச் செலுத்தத் தவறும் அத்தகைய இயக்குநர் தவணை தவறுநர் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவணை தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபையின் தவிசாளர், எவரேனும் பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு தவணை தவறுநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் உரிய தேதியன்று அல்லது

அதற்கு முன்னர் செலுத்தப்படாத அத்தகைய அறவீடு தவணை தவறுகையிலுள்ள அறவீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) தவணை தவறுநர் தவணைதவறுகையிலுள்ள அறவீட்டிற்கு மேலதிகமாக –

(அ) இரண்டாம் பிரிவின்கீழ் அறவீட்டின் கொடுப்பனவுக்கு வருமதியான தேதியிலிருந்து அடுத்துறும் ஒரு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்திற்கு தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்து சதவீதப்படியும் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுக்கு வருமதியான தேதியிலிருந்து அடுத்துறும் ஒரு மாத காலப்பகுதி ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பாகத்திற்கு தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதப் படியும்,

கணிப்பீடு செய்யப்பட்ட மிகையிறுப்பனவொன்றை ஆணைக்குழுவுக்குச் செலுத்துவதற்காளாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குத் தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் அறவீட்டை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவின் தொகையுடன் சேர்த்து இதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட முறையில் மீட்டுப்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழு தவணை தவறுகையிலுள்ள அறவீட்டை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவு தொகையுடன் சேர்த்து மீட்டுப்பெறுவதற்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்குமுன் இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்மீது தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவையும் மீட்டுப்பெறுவதற்கு வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான ஆணைக்குழுவின் முன்னத்தைப்பற்றி தவணை தவறுநருக்கு அறிவிக்கும் அறிவித்தலொன்றை தவணை தவறுநருக்கு வழங்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழு (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தவணை தவறுநருக்கு அறிவித்தல் வழங்கியுள்ளவிடத்தும் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகை அதன்மீதான மிகையிறுப் பனவுடன் சேர்த்து அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப் பட்ட மூன்று வார காலப்பகுதி கழிந்துள்ளபோதிலும் கூட செலுத் தப்படாது எஞ்சியுள்ளவிடத்தும் ஆணைக்குழு தவணைதவறுநர் வதிகின்ற அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு தவணை தவறுநரின் பெயரும் முகவரியும் தவணை தவறுகையிலுள்ள மொத்தப் பணத்தொகையும் அடங்கிய சான்றிதழொன்றை தவிசாளரின் கைப்பட அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் இப்பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச் செய்வதில் தவணை தவறியுள்ளார் என்ற கூற்றொன்றுடன் சேர்த்து வழங்குதல் வேண்டும். தவணை தவறுநர் கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து சான்றிதழ் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தவிசாளரினதும் பணிப்பாளர் சபையினதும் பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் பெயர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவான் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் கிடைக்கப்பெற்றதன்மீது குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியன்று தமது முன்னிலையிற் தோன்றி தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுடன் சேர்த்து மீட்டுப்பெறுவதற்கு தவணை தவறுநருக்கெதிராக ஏன் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அவரைத் தேவைப்படுத்தி தவணை தவறு நருக்கு அழைப்பாணையொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும். காட்டப்பட்ட காரணம் கொடுப்பனவு செய்யப்படாமைக்கான ஏதுவை விளக்குவதற்குப் போதுமானதல்ல என நீதிவானுக்குத் தோன்றுமிடத்து நீதிவான் அதனைப் பதிந்ததன் பின்னர் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுடன் சேர்த்து நீதிவானால் விதிக்கப் பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று தவணை தவறு நரிடமிருந்து மீட்டுப் பெறுவதற்குக் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு மீட்டுப்பெறப்பட்ட பணம் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். ஆணைக்குழு அதனைத் திரட்டு நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும்.

## பாகம் II

### 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் II ஐத் திருத்துதல்

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் II ஐத் திருத்துதல்.*

**7**. 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம்II அதன் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ளவாறு, "2008, பெப்புருவரி 28 ஆம் தேதியன்று முடிவுறும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2008, பெப்புருவரி 29 ஆம் தேதியன்று தொடங்கி 2010 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் II ஏற்புடைத் தாகாமை.*

**8**. ஐமிச்சத்தைத் தவிர்ப்பதற்கு 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் அப்பாகத்தின் ஏற்பாடுகள் 2011 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தானதோ அந்த எவரேனும் ஆளுக்கு ஏற்புடைத்தா தலாகாது.

## பாகம் III

### பொது

*ஒழுங்கு விதிகள்.*

**9**. (1) அமைச்சர் எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தில் விதித்துரைக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக் கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதற்கு முன்னர் அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி (3) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தத் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நட்டோத்தர வாதம்.

**10.** 2011 சனவரி 1 ஆம் தேதி தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது எவரேனும் பாவனையாளரால் எவரேனும் இயக்குநரிடமிருந்து விதிப்பனவு செய்யப்பட்டு சேகரிக்கப்பட்ட அறவீட்டின் தொகை செல்லுபடியான விதத்தில் விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இயக்குநர் அத்தகைய அறவீட்டின் சேகரிப்பு தொடர்பில் ஏதேனும் வழக்கிலிருந்து இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும் படுகின்றார்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**12.** இப்பிரிவின் நோக்கங்களுக்கு -

"வழங்கலின் பெறுமதி" என்பது, பிரிவு 21அ என்பதன் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்படற்பாலதான அறவீட்டைக் கழிப்பனவு செய்தபின்னர் சேவையின் மொத்தப் பெறுமதியின் பெறுமதி எனப் பொருள்படும்;

"தொலைத்தொடர்பு சேவை" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள்

*சட்டத்தின் 17 ம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத்தொடர்பு மற்றும் ஏனைய இயக்குநர்களால் இறுதி ஒப்பப்பணம் செலுத்துநர்களுக்கு வழங்கப்படும் சேவை எனப் பொருள்படும். ஆனால் உள்ளூர் இயக்குநர்களுக்கும் சர்வதேசக் குடியேற்றத் திற்குமிடையிலும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல்கடந்த தொலைத்தொடர்பு குடியேற்றங்களுக்கும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல் கடந்த தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III இன் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேவப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளுக் குமிடையில் இடைத் தொடர்பு சேவைகளையும் அணுக்கச் சேவைகளையும் உள்ளடக்கமாட்டாது ;*

*“இடைத்தொடர்பு சேவை” என்பது, 1991 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் இடைத் தொடர்பு சேவைகள் எனப் பொருள்படும் ;*

*“அணுக்கச் சேவை” என்பது, உள்ளூர் அல்லது சர்வதேச குத்தகை இணைப்புச் சேவைகள், “பேக்ஹோல் சேவைகள்”* (backhaul Services) *மற்றும் வாளா உட்கட்டமைப்புச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கும்;*

*“இயக்குநர்” என்பது 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமம் பெற்ற இயக்குநர் ஒருவர் எனப் பொருள்படும்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*